


வக்ப் வாரிய சட்டத் திருத்த மசோதாவை ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட நாடாளுமன்றக் கூட்டுக்குழு ஆலோசனைக் கூட்டம் புதுடெல்லியில் நேற்று (14.10.2024) நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாடாளுமன்ற மக்களவை கழகக் கொறடா ஆ.இராசா மற்றும் எம்.எம்.அப்துல்லா எம்.பி. உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்ற காட்சி.

### நெல்லைக்கு வருகை தந்த

# அமைச்சர் கே.என்.நேருவுக்கு உற்சாக வரவேற்பு!

## நெல்லை கிழக்கு - மத்திய மாவட்டக் கழகம் சார்பில் இரா.ஆவுடையப்பன் - டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் அளிக்கப்பட்டது!

நெல்லை.அக்.15.

நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சராக கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ள கழகத்தின் முதன்மை செயலாளரும்,நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு நேற்று (13 ம்தேதி) நெல்லைக்கு வருகை தந்தார்.நெல்லை வந்த அமைச்சர் கே.என். நேருவுக்கு நெல்லை கிழக்கு மாவட்டம் மற்றும் நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சராக கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு நியமிக்கப் பட்டுள்ளார்.நெல்லைக்கு வருகை தந்த அமைச்சர் கே.என். நேருவை பாளையங்கோட்டை கே.டி.சி.நகர் பைபாஸ் பாலம் அருகே நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் ஆகியோர் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்றார்.

நிகழ்வில் நெல்லை மாநகர செயலாளர் சு. சுப்பிரமணியன்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு,மாநில நெசவாளர் அணி செயலாளர் சொ.பெருமாள்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் என்.மாலைராஜா, மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம்,மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த், நெல்லை தொகுதி பார்வையாளர், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் முத்துச்செல்வி,பாளை தொகுதி பார்வையாளர்,மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர் வசந்தம் ஜெயக்குமார்,

பாளை ஒன்றிய செயலாளர்கள் (தெற்கு) கே.எஸ்.தங்கபாண்டியன்,(மத்திய) போர்வெல் கணேசன்,அருள்மணி, மாரியப்பன், அன்பழகன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ. பிரபாகரன், ஏ.எல்.எஸ்.லெட்சுமணன்,

பேச்சிபாண்டியன், பொதுக்குழு உறுப்பினர்கள் சரவணன்,பரமசிவ ஐயப்பன், ராமச்சந்திரன்,நடராஜன், மாநில சட்டத்துறை துணைச் செயலாளர் ராஜாமுகமது,பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன், அன்டன் செல்லத்துரை,துபாய் சாகுல், நமச்சிவாயம், மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ், தர்மன் ,கிரிஜா குமார், அப்துல்கையூம்,

அணி அமைப்பாளர்கள் செல்வ சூடாமணி, பலராமன், கல்லூர் பாலா, அனிதா, டாக்டர் ராஜகுமாரி, நவநீதன், நவ்ஷாத், பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை, துணை அமைப்பாளர்கள் மீரான் மைதீன், உஸ்மானி, எல்.ஐ.சி. பேச்சிமுத்து, சேக் உஸ்மானி, முருகன், தவசிராஜன், பரப்பாடி ஞானராஜ், ரம்ஜான்அலி, சாதிக், பல்லிக்கோட்டை செல்லத்துரை, தேவிகா, ஜோதிப்பிரியா, பவானி, வட்டச் செயலாளர்கள் பேபி கோபால், வெங்கடேஷ், சடாமுனி, ஆவின் கல்யாணி, மாமன்ற உறுப்பினர்கள் ரம்ஜான் அலி, கந்தன், ஆமீனாசாதிக், ஜெகநாதன், உலகநாதன், சகாய ஜூலியட், சுந்தர், டாக்டர் சங்கர் தொ.மு.ச. சைபுதீன், சண்முகசுந்தரம், பெரோஸ்கான், முறுக்கு சாகுல், உத்திர நாயகம், ஜாகிர் உசேன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் திரளாக கலந்து கொண்டனர்.

அதன் பின்னர் அமைச்சர் கே.என்.நேரு நெல்லை கிழக்கு மாவட்ட கழக அலுவலகத்திற்கு சென்று மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் முன்னிலையில் கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார். அதனைத் தொடர்ந்து நெல்லை மத்திய மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் முன்னிலையில் கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார்.பின்னர் மாநகர கழக அலுவலகத்திற்கு சென்று மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் முன்னிலையில் கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார். தொடர்ந்து அங்குள்ள கலைஞர் அவர்கள் நூலகத்தை பார்வையிட்டார்.

முன்னதாக அமைச்சர் கே.என்.நேரு நெல்லை கிழக்கு மாவட்டம்,மத்திய மாவட்டம், மாநகர மாவட்டம்,ஆகிய மாவட்டக் கழக அலுவலகத்தில் இருந்த கலைஞர் அவர்களின் திருஉருப்படத் திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

### ஏரியூரில் மக்கள் தொடர்பு முகாம்

# 149பயனாளிகளுக்கு ரூ.60 லட்சத்தில் நல உதவிகள்!

## அமைச்சர் கே ஆர்.பெரிய கருப்பன் வழங்கினார்!

சிவகங்கை. அக். 15-

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி தாலுகா, ஏரியூரில் மக்கள் தொடர்பு முகாம் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கூட்டுறவுத். துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் கலந்து கொண்டு பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் 149 பயனாளிகளுக்கு 60 லட்சத்து 19 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட்வர்ஸ், திட்ட அலுவலர் முனைவர் சிவராமன், மாவட்ட கூட்டுறவு இணைப்பதிவாளர் ராஜேந்தர பிரசாத், மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி நிர்வாக இயக்குனர் திருமதி உமா மகேஸ்வரி, கலால் ஆணையர் ரங்கநாதன், மாவட்ட சுகாதார அலுவலர் விஜய சந்திரன் சிங்கம்புணரி ஒன்றிய கழக செயலாளர் கே . பாலசுப்பிரமணியன் ,முன்னாள் ஒன்றிய செயலாளர்ஏ.எல்.சந்திரன், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார் மற்றும் சுற்றுப்புற கிராம மக்கள் கலந்து கொண்டார்கள்.

### முரசொலி செல்வம் மறைவு!

# திராவிட இயக்கத்துக்குப் பேரிழப்பு!

## வணிகர் சங்க பேரமைப்பு தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா இரங்கல்!

சென்னை, அக். 15-

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்புத் தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

முரசொலியின் ஒளி என்றாலே அது கலைஞரின் குரலாக ஒலித்து வந்திருக்கிறது என்பது திராவிட வரலாறு. கலைஞரையும், முரசொலியையும் பிரித்துப் பார்க்கவே முடியாது என்பது அரசியல் சூத்திரம்.

அந்த வகையில் முரசொலியை நெருக்கடி கால இன்னல்களிலிருந்தும், நிதி நெருக்கடியிலிருந்தும் பாதுகாத்து இன்று வரை பாமரர் மத்தியில் முரசொலி பத்திரிகை முன்னிலை வகிக்கிறது என்று சொன்னால் அவை அனைத்தும் முரசொலி செல்வம் அவர்களுடைய தன்னலமற்ற உழைப்பு தரமான செயல்பாடுகளுமே காரணம் என்பது மறுக்க இயலாது.

தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களை தாங்கிப் பிடித்திருந்த தலைமுறை கைகளுள் ஒன்று, இன்று காலதேவனின் கரங்களுள் முடங்கி போய்விட்டது.

முரசொலி செல்வம் அவர்களின் மறைவு என்பது, திராவிட வரலாற்றில் ஒரு பேரிழப்பு என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் பதிவு செய்வதோடு, அவரை இழந்து வாடும் அவரின் குடும்பத்தாருக்கு அவரின் பிரிவை தாங்கிக் கொள்ளும் மன வலிமையை வழங்கிட விழைகிறேன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைந்திட தமிழக அனைத்து வணிகர்கள் சார்பாக தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு கனத்த இதயத்துடன் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கின்றது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கனமழை 15 ஆம் தேதி முதல் 17 ஆம் தேதிவரை பெய்யக்கூடும் என்ற வானிலை மையமுன் எச்சரிக்கையைத் தொடர்ந்து, தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட , புனித தோமையார் மலை ஒன்றியம், முடிச்சூர் ஊராட்சியில், மழைநீர் கால்வாய் அமைப்பது குறித்து மற்றும் வடகிழக்கு பருவமழை காலங்களில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து அரசு கூடுதல் தலைமை செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குனர் பி .பொன்னையா, தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர். ராஜா. எம்.எல்.ஏ., கூடுதல் ஆட்சியர் மற்றும் திட்ட இயக்குனர் மா.ஊ.வ.மு ஆர்.அனாமிகா ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். இந்நிகழ்வில் அரசு அலுவலர்கள், மற்றும் கழக தோழர்கள் பங்கேற்றனர்.

# முரசொலி செல்வத்தை என்னால் மறக்க முடியாது!



**நா**ன் 1966 நவம்பர் முதல் 1972 டிசம்பர் வரை முரசொலி பத்திரிகையில் துணை ஆசிரியராகப் பணியாற்றியவன். என்னை அவரிடம் அறிமுகப்படுத்தி அங்கே சேர்த்துவிட்டவர் கலைஞர் வீட்டில் பணியாற்றிய கரு. செயல்மணி என்ற நண்பர் தான்.

நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ராமசாமி அவர்களை சிறப்பாசிரியராகக் கொண்டு தஞ்சை வி.எஸ். ராசு என்பவர் நடத்திய “புரட்சிக் குயில்” என்ற பத்திரிகைக்கு ஆசிரியராகப் பணியாற்றினேன். அதில் கட்டுரை, தலையங்கம் எல்லாம் எழுதுவது நான்தான். அதை வி.எஸ். ராசு முரசொலிக்கு அனுப்பி வைப்பார். அதையெல்லாம் படித்த செல்வம் அவர்கள் முத்துலிங்கம் என்பவர் நன்றாக எழுதுகிறாரே. கவிதைகளும் நன்றாக இருக்கிறது என்று முரசொலியில் யாரிடமோ சொல்லிக் கொண்டிருந்திருக்கிறார். அதைக் கேட்ட செயல்மணி எனக்கு அவரை நன்கு தெரியும். எங்கள் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான் அவர். அழைத்து வரட்டுமா என்று கேட்டிருக்கிறார். அழைத்து வாருங்கள் என்று செல்வம் சொல்லி இருக்கிறார்.

அவர் சொன்ன அந்த வாரத்திலேயே ‘புரட்சிக் குயில்’ பத்திரிகை நின்று விட்டது. இரண்டொரு நாள் கழித்து செயல்மணி அழைத்துச் சென்று செல்வத்திடம் அறிமுகப்படுத்தினார். அன்றைக்கே என்னை செல்வம் ஆசிரியர் குழுவில் சேர்த்துக் கொண்டார். 1966-ல் இருந்து 1968 வரை நான், அடியார், மணிமொழி, மா.பாண்டியன் ஆகிய 4 பேர்தான் முரசொலி ஆசிரியர் குழுவில் இருந்தோம்.

முத்துலிங்கமும், அடியாரும் ஒரு ஷிப்டிலும், மா. பாண்டியன், மணிமொழி ஒரு ஷிப்டிலும் பணியாற்றுங்கள் என்று செல்வம் தான் எங்களுக்குப் பொறுப்பைக் கொடுத்தார். 1968-க்குப் பிறகு முரசொலியில் பலர் சேர்ந்தார்கள்.

1966-ல் இருந்து எனக்குத் தங்கும் வீடாகவும் தாய் வீடாகவும் இருந்தது முரசொலிதான். முரசொலி தான் என் சிந்தனைப் பயிர்களுக்கு நீர்வார்த்த இடம். அதற்குக் காரணம் செல்வம்தான். நான் அறிந்த வரை பத்திரிகை நிர்வாகிகளில் செல்வத்தைப்போல் மனிதநேய மிக்க மனிதர்களைப் பார்த்ததில்லை. இன்றும் தொடர்ந்து முரசொலி படிப்பவர்களில் நானும் ஒருவன்.



**- கவிஞர் முத்துலிங்கம்**
*திரைப்படப் பாடலாசிரியர்,*

முரசொலியில் அடிக்கடி என்னை கவிதை எழுதச் சொல்லி ஊக்குவித்தவர் செல்வம்தான். ஏதேனும் ஒன்றைப் பற்றிக் கவிதை எழுத வேண்டுமென்றால் ஆசிரியர் சொன்னார் என்று சொல்லித்தான் என்னைக் கவிதை எழுதச் சொல்வார். நாங்கள் கலைஞரைத்தான் ஆசிரியர் என்று அப்போது சொல்வோம்.

1967-ல் புகழ் பெற்ற அண்ணா கவியரங்கம் புரசைவாக்கம் தர்மப் பிரகாஷ் மண்டபத்தில் நடைபெற்றது. சென்னைக்கு வந்த புதிதில் நான் கலந்துகொண்ட முதல் கவியரங்கம் அதுதான். கலைஞர்தான் அதற்குத் தலைமை தாங்கினார். சென்னையைப் பொருத்த வரை கவிக்கோ அப்துல் ரகுமானுக்கும் அதுதான் முதல் கவியரங்கம். கலைஞர் தலைமையில் முதன் முதல் நாங்கள் பாடிய கவியரங்கமும் அதுதான். அந்தக் கவியரங்கில் நான் கலந்துகொண்டதற்கு கவிஞர் கருணானந்தம், செல்வம், கலைஞர் மூவருமே காரணம்.

நான் பாடும்போது “முரசொலியில் எனைச் சேர்த்து முறையோடு ஆதரித்து வாழவைத்துப் பாடவைக்கும் வள்ளல் குணம் கொண்ட செல்வம் அவர்களுக்குச் சிரம் தாழ்ந்த என் வணக்கம்” என்று பாடினேன். சிலர் கைதட்டினார்கள்.

கவியரங்கம் முடிந்ததும் முரசொலி அடியாரிடம் என்னைப் பற்றியும் பாடுவார் என்று தெரிந்திருந்தால் நாமே கைதட்டுவதற்குச் சிலரை அழைத்துச் சென்றிருக்கலாமே என்று சிரித்துக்கொண்டே சொன்னாராம் செல்வம். அடியார் தான் இதைச் சொன்னார்.

ஒருமுறை சேலத்தில் கலைஞரைப் பற்றிய கவியரங்கம் நடந்தது. கண்ணதாசன் தான் அதை நடத்தினார். நான் அந்தக் கவியரங்கில் கலந்துகொள்ள வேண்டும் என்று கண்ணதாசன் முரசொலி அலுவலகத்திற்குத் தொலைபேசியில் என்னுடன் பேசினார்.

அதே கவியரங்கம் சென்னையிலும் நடந்தது. அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் பாவலர் மா.முத்துச்சாமி அவர்கள் தலைமையில் அது நடந்தது. அந்தக் கவியரங்கில் நான், முடியரசன், பொன்னிவளவன், கண்ணதாசன், கருணானந்தம், கொத்தமங்கலம் சுப்பு போன்ற பல கவிஞர்கள் பாடினோம். தாய் என்ற தலைப்பிலே நான் பாடினேன். என் கவிதைக்குத்தான் அதிகக் கைதட்டல் கிடைத்தது. இந்தக் கவியரங்கக் கவிதைகள் புத்தகமாகவும் வெளிவந்தது. என் கவிதையைக் கண்ணதாசன் பாராட்டி அப்புத்தகத்திற்கு அணிந்துரை எழுதியிருந்தார். அந்தக் கவியரங்கை ஏற்பாடு செய்தவர் இளமுருகு பொற்செல்வி ஆவார்.

அதே கவியரங்கம்தான் சேலத்தில் கண்ணதாசனால் நடத்தப் பெற்றது. வேழ வேந்தன்தான் அக்கவியரங்கத்திற்குத் தலைவர். அதற்கு வரவேண்டுமென்று கண்ணதாசன் என்னை அழைத்தபோது முரசொலியில் வேலையிருக்கிறது வர முடியாது. மன்னித்துக் கொள்ளுங்கள் என்றேன்.

நான் முனா கானாவிடம் (கலைஞர்) சொல்லிக் கொள்கிறேன். நீ அவசியம் வா என்றார் கண்ணதாசன். கொஞ்ச நேரத்தில் செல்வம் அவர்கள் என்னிடம் வந்து சேலத்தில் கலைஞரைப் பற்றிய கவியரங்கமாமே; கண்ணதாசன் பேசினார். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்; நீங்கள் போய் வாருங்கள் என்றார். அதன் பிறகுதான் நான் சென்றேன். இப்படிப் பலமுறை பல இலக்கிய நிகழ்ச்சிகளுக்கு அனுப்பி வைத்தவர் செல்வம். இன்றைய அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்களும் முரசொலியில் என்னைக் கவிதை எழுதச் சொல்லி ஊக்கப்படுத்தியவர் என்பதையும் நான் சொல்லியாக வேண்டும்.

அந்த வகையில் செல்வம் அவர்களை என்னால் மறக்க முடியாது. அதனால்தான் மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவனாக இருந்தாலும் அவர் மறைவுக்கு வந்து அஞ்சலி செலுத்தினேன். உதவி செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் செய்த நன்றியை மறக்கக் கூடாது என்று எம்.ஜி.ஆர்.அடிக்கடி எங்களிடம் கூறுவார். அந்த வகையில் நான் பலருக்கு நன்றிக் கடன் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். என் நன்றிக்குரிய முரசொலி செல்வத்தின் புகழ் வாழ்க.

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிவிப்பு!

தஞ்சை, அக். 15 -

தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தஞ்சை வடக்கு மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் வருகின்ற 18.10.2024 வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணிக்கு கும்பகோணம் சகாஜிநாயக்கன் தெரு, தஞ்சை வடக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் க.நசீர்முகமது தலைமையில் நடைபெற உள்ளது.



அதுசமயம் கூட்டத்தில் முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் சிறப்பு அழைப்பாளர்கள் குறித்த நேரத்தில் தவறாது கலந்துகொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் :**

1. தொகுதி பார்வையாளர்கள் அறிமுகம்.
2. வாக்காளர் பட்டியல் சரிபார்கும் பணி.
3. OMR படிவம்.
4. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# நாகையில் - அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி - நிர்வாகிகளுடன் சந்திப்பு!

## மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் வேண்டுகோள்!

நாகை, அக். 15 -

நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள்திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்களை கடை கோடி மக்களுக்கும் கொண்டு செல்லும் வகையிலும், நாகை மாவட்டத்தை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்ல நாகை மாவட்டத்திற்கு பொறுப்பு அமைச்சராக தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியை நியமனம் செய்து உத்தரவிட்டுள்ளார்கள்.

நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சரான அன்பில் மகேஷ் பொய்யாமொழி நாகை மாவட்டத்திற்கு இன்று (15.10.2024 ) மாலை 4.00 மணியளவில் நமது நாகை மாவட்ட தி.மு.க. அலுவலகத்திற்கு வருகைதந்து நிர்வாகிகளை சந்திக்க உள்ளார்.

அமைச்சர் வருகையின் போது நாகை மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள் நிர்வாகிகள் சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழகத்தினர் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் நாகை மாவட்ட கழகச் செயலாளரும்,தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் கூறியுள்ளார்.